2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) குற்றவியல் விசாரணை முறை தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1996

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1996-ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணை முறை தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1996-ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணை முறை தொகுப்பு (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்",

எனக் கோருகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.